**கந்தளாய் பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கந்தளாய் பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கந்தளாய் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன்

ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 2,625,150 ஆன போதும் கணக்கில் அவை ரூபா 1,471,585 ஆக காண்பித்திருந்ததால் முத்திரை கட்டணத் தொகை ரூபா 1,153,565 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆண்டு வரை பெற வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 1,471,585.00 ஆவதுடன் 2023 ஆண்டிற்குரிய முத்திரை கட்டணத்தை கண்டறிய முடியாதன் காரணமாக தவறான கணக்கீடு இடம்பெற்றுள்ளது மற்றும் எதிர்காலத்தில் சீராக்கப்டும். | கணக்குகளை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | அலுவலக நிருவாக கட்டிட அறைகளை பிரிப்பதற்காக (Partition) செலவிடப்பட்ட ரூபா 179,661 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | அலுவலக நிருவாக கட்டிட பிரிப்பதற்கான பெறுமதியை 2024 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது கணக்குகளிற்கு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய ரூபா 171,411 ஆன நிலையான வைப்பு வட்டி பெற வேண்டிய மீதியாக கணக்குகளில் காண்பித்திருக்கவில்லை. | நிலையான வைப்பு வட்டி வருமானத்தை 2024 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது தவறை சரிசெய்து கணக்குகளிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் பிரதேச சபை நிதியத்திற்கு, உள்ளூர் அபிவிருத்தி உதவி கருத்திட்டத்தினால் (LDSP) கிடைத்திருந்த ரூபா 28,797,053 ஆன நிதி மூலதன பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | LDSP நிதியத்தில் மூலதன பெறுவனவு மற்றும் மூலதன செலவினம் 2024 ஆண்டு முதல் சரியாக புத்தகங்களிற்கு எடுத்து சரியான நடைமுறையின் பிரகாரம் மேற்கொண்டு செல்லவும், சரியாக கணக்கீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டினுள் செலவிடப்பட்ட ரூபா 32,873,781 ஆன பிரதேச அபிவிருத்தி உதவி கருத்திட்ட (LDSP) நிதி மூலதன செலவாக காண்பித்திருக்கவில்லை. | LDSP நிதியத்தில் மூலதன பெறுவனவு மற்றும் மூலதன செலவினம் 2024 ஆண்டு முதல் சரியாக புத்தகங்களிற்கு எடுத்து சரியான நடைமுறையின் பிரகாரம் மேற்கொண்டு செல்லவும், சரியாக கணக்கீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஊ) | மிகையாக கணக்கிடப்பட்டுள்ள இருப்பு பெறுமதி ரூபா 3,601,719 ஆக திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் 4 வருடங்களின் இருப்பு மீதிகளை விபரித்து பார்க்கும் போது அவ்வாறான மிகையாக கணக்கிடல் ஒன்று இடம்பெற்றிருந்ததாக தகவல்கள் கணக்காய்விற்கு அறிக்கையிடப்படவில்லை. | இருப்பு மீதிகளின் தவறுகளை இனங்கண்டு சரியான பெறுமதியை கணக்கிட்டு எதிர்வரும் ஆண்டு கணக்கு தயாரிக்கும் போது தவறை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளை சரியாக தயாரிக்க வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | காணி மற்றும் கட்டிடங்கள் | 225,545,244 | காணி மற்றும் கட்டிடங்களின் அட்டவணைகள், உரிமை உறுதிகள் மற்றும் தளக்கேலம். | ஆட்டவணை தயாரிப்பதற்கு மற்றும் விடயபரிப்பிற்கு உரிய பதிவேடுகளை தயாரித்து இற்றைபடுத்துவதென. | கணக்கு விடயங்களிற்கான சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இயந்திர உபகரணங்கள் | 27,885,507 | அட்டவணை | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மோட்டார் வண்டிகள் மற்றும் கரத்தைகள் | 51,040,044 | சோத்துக்கள் அட்டவணை, பதிவு சான்றிதழ்கள் | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 8,144,054 | சொத்துக்கள் அட்டவணை | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் | 2,331,900 | சொத்துக்கள் அட்டவணை | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | பொதுக் களஞ்சியம் | 530,246 | இருப்பு அட்டவணை | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | ஆயுள்வேத இருப்பு களஞ்சியம் | 253,994 | இருப்பு அட்டவணை | -மேற்படி- | -மேற்படி- |
| ஏ) | நிலுவை ஏனைய வருமானம் | 14,277,666 | காலப்பகுப்பாய்வு, தனி நபர் மீதி பட்டியல், | -மேற்படி- | -மேற்படி- |
| (ஐ) | பல்வேறு கடன்கொடுனர் | 4,129,651 | தனி நபர் மீதி பட்டியல், காலப்பகுப்பாய்வு | -மேற்படி- | -மேற்படி- |
| (ஒ) | நிலுவை கடை வாடகை | 6,479,861 | காலப்பகுப்பாய்வு | -மேற்படி- | -மேற்படி- |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) | 24 பிரிவு | சபைக்கு சொந்தமான பாதைகளை இனங்கண்டு அவற்றை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புதில் வழங்கப்படவில்லை. | பிரதேச சபை சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 134 பிரிவு | அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேற்றமடைந்த பிரதேசங்களை காலத்திற்கு காலம் இனங்கண்டு வீதவரி அறவிட வேண்டிய போதும் 1980 ஆண்டிற்கு முன்னர் இனங்கண்ட பிரதேசங்களிற்காக மாத்திரம் வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | புதில் வழங்கப்படவில்லை. | - மேற்படி - |
| (iii) | 135 பிரிவு | அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள வீதவரி விடுவிக்க வேண்டிய பொது, சமய புனித நடவடிக்கைகள், கல்வி மற்றும் வீடல்லா ஆதனங்கள் பட்டியலொன்றை தயாரிக்க வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதில் வழங்கப்படவில்லை. | - மேற்படி - |
| (iv) | 139 பிரிவு | வீதவரி விதிப்பதன் கீழ் ஏதேனும் வீடொன்று கட்டிடமொன்று காணியொன்று அல்லது ஆதனமொன்றின் வருடாந்த பெறுமதியை மதிப்பிட இயலுமானவாறு பருவகால அறிக்கை அழைப்பித்திருக்கவில்லை. | புதில் வழங்கப்படவில்லை. | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | 152 பிரிவு | தமது அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள வங்கி, நிதி கம்பனிகள், அடகு வியாபாரங்கள் மற்றும் சட்ட ஆலோசனை போன்ற தொழில்கள் தொடர்பாக கணிப்பீடொன்றை மேற்கொண்டு வரி அறிவட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புதில் வழங்கப்படவில்லை. | - மேற்படி - |
| (vi) | 158, 159, 162, 163 பிரிவுகள் | மீளாய்வாண்டு இறுதியில் அறிவட வேண்டிய ரூபா 131,941,166 ஆன வீதவரி மற்றும் ரூபா 25,612,621 ஆன நிலுவை வீதவரி வருமானம் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | புதில் வழங்கப்படவில்லை. | - மேற்படி - |
| (vii) | 126 (ஓ) பந்தி | அதிகார பிரதேசத்தினுள் செயற்படும் வாகன தரிப்பிடங்கள் மற்றும் முச்சக்கர வண்டி தரிப்பிடங்களை சிறப்பாக முகாமைத்துவம் செய்து ஒழுங்குபடுத்த வேண்டிய போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதில் வழங்கப்படவில்லை. | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1989 ஏப்ரல் 17 திகதிய இலக்கம் 554/5 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் விரசுறிக்கப்பட்ட 1988 பிரதேச சபை நிதி மற்றும் நிருவாக விதி | | | |
| (i) | 32 ஆம் விதி | சபையினால் பிரதேச சட்டம் 23 படிவம் பிரகாரம் வீதவரி பதிவேட்டை பராமரிக்காததுடன் MS Excel மென்பொருள் பிரதியொன்றின் மூலம் மாத்திரம் தகவல்களை பேணிச் செல்வதன் காரணமாக சரியான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியவில்லை. | புதில் வழங்கப்படவில்லை. | பிரதேச சபை நிதிய விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 33, 34, 35 ஆம் விதி | நிலுவை வீதவரி குறித்த ஆதனங்களை கைப்பற்ற அல்லது தடை செய்ய செயற்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக அதிகார பிரதேசத்தில் 24 வீதவரி பிரிவுகளினுள் ரூபா 5,000 இலும் அதிக நிலுவை ஆதனம் 883 எண்ணிக்கை நிலவியதுடன் அந்த | புதில் வழங்கப்படவில்லை. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆதனங்களிற்காக ரூபா 10,727,240 தொகை அறவிட வேண்டியதானது. அது தொடர்பாக விதி பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (iii) | 53 ஆம் விதி | சபை அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள அனைத்து வருமான மூலங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடொன்றை மேற்கொண்டு அறிக்கை தயாரிக்க வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புதில் வழங்கப்படவி ல்லை. | பிரதேச சபை நிதிய விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 59 ஆம் விதி | ஒவ்வொறு ஆண்டு துவக்கத்திலும் சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்கள் பற்றி கணிப்பீடொன்றை மேற்கொண்டு வியாபார அனுமதிப்பத்திர மற்றும் வியாபார வரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புதில் வழங்கப்படவி ல்லை. | - மேற்படி - |
| (v) | 193 ஆம் விதி | வரவு செலவு குறை நிரப்பு அங்கீகார செலவுடன் செலவு விடயங்களின் உண்மையான ஒப்பிட்டு மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாக காரணம் குறிப்பிடும் கூற்றொன்றை கணக்குளுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | புதில் வழங்கப்படவி ல்லை. | - மேற்படி - |
| (vi) | 218 ஆம் விதி | கிரயம் ரூபா 225,545,244 ஆன காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொறு ஆண்டிற்கும் ஒரு முறை கணிப்பீடு செய்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவி ல்லை. | - மேற்படி - |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை. | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 571 | ஆண்டு 02 இனை விஞ்சிய வைப்புக்கள் (நிறுத்தல் வைப்வு 259) 05 மீதிகள் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்துக் கொண்டிருந்ததுடன் நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவி ல்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 880 | பிரதேச சபையில் கடமையில் ஈடுபட்டுள்ள பிணை வைக்க வேண்டிய 20 அலுவலர்கள்/ ஊழியர்களிடமிருந்து உரியவாறு பிணை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நீதிமன்ற அமைச்சின் செயலாளரின் இலக்கம் 04/1994 மற்றும் 1994 பெப்ரவரி 18 திகதிய சுற்றறிக்கை | ஓவ்வொறு பதவிநிலை உத்தியோகத்தரினாலும் வருடாந்தம் தமது சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்த வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2008 பெப்ரவரி 25 திகதிய இலக்கம் 1533/16 கொண்ட வர்த்தமானி | வர்த்தமானி ஏற்பாடுகள் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் திகதிக்கு 03 மாதங்களிற்கு முன்னர் அந்த சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் அவ்வாறு காலாவதியான 19 சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் தொடர்பாக வர்த்தமானி ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | வர்த்தமானி ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 02/2018 சுற்றறிக்கை | ஓவ்வொறு ஆண்டும் செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும் 2023 ஆண்டிற்காக சபையினால் செயலாற்றுகை உடன்படிக்கை தயாரித்திருந்த போதும் அந்த உடன்படிக்கைகளில் மதிப்பீட்டாளர், மதிப்படுபவர் மற்றும் அளவீட்டாளரினால் கையொப்பமிட்டு உடன்படிக்கையில் செல்லுபடியாகும் தன்மையை பாதுகாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,849,582 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 51,602,610 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தவிசாளரினால் சமர்ப்பிக்’கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரி | 7,752 | 3,151 | 1,547 | 14,278 | 4,647 | 3,367 | 2,352 | 12,674 |
| வாடகை | 28,589 | 5,946 | 4,205 | 6,480 | 12,625 | 6,931 | 5,173 | 4,739 |
| ஏனைய வருமானம் | 475 | 2,259 | - | 8,205 | 1,900 | 4,900 | 4,900 | 5,946 |
| | ------------ | ------------ | ------------ | ------------ | ------------ | ------------ | ------------ | ------------ |
| கூட்டுத் தொகை | 36,816 | 11,356 | 5,752 | 28,963 | 19,172 | 15,198 | 12,425 | 23,359 |

### 2.2.1 வருமானத்தை சேகரிப்பதற்கான செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டிறுதியில் 23 கடையறைகளில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை கடையறை வாடகை ரூபா 2,824,194 ஆனதுடன் அவற்றின் ரூபா 1,691,962 ஆன தொகை இரண்டு ஆண்டுகளிற்கும் அதிக காலமாக நிலுவையாக காண்பிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ஆ) | (i) வீதவரி பிரசுரிக்கப்பட்டுள்ள பிரதேசத்தினுள் மதிப்பிடப்படாத ஆதனங்கள் தொடர்பான பட்டியல் ஒன்றை வருமான பரிசோதகரினால் தயாரிக்கப்பட வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | மதிப்பிடப்படாத ஆதனங்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். |
| | (ii) சபை அதிகார பிரதேசத்திலுள்ள அரச திணைக்களங்களிற்கு சொந்தமான ஆதனங்கள் தொடர்பாக அறவிட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 1,053,290 பெறுமதியான வீதவரி அறவிடப்படாது காண்பிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைத்துள்ள கடமைகளை மேற்கொள்ளல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் பிரதான 28 விடயங்களை நிரைவேற்ற துணைச் சட்டம் விதிக்கப்பட வேண்டியிருந்த போதும் 2023 திசெம்பர் 31 திகதி வரை 05 விடயங்களிற்கு மாத்திரம் துணைச் சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | முறையாக துணைச் சட்டம் விதிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை கடமைக்கிடையில் பிரதான கடமையாக அதிகார எல்லையினுள் மேற்கொள்ளும் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ள வேண்டிய போதும், 2021,2022,மற்றும் 2023 ஆண்டுகளிற்காக முறையே அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் 11 உம், 05 உம் மற்றும் 04 வீதம் விநியோகிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு ஆயினும் அதிகார பிரதேசத்தில் அனுமதியற்ற நிர்மாணங்கள் எதுவும் அறிக்கையிடப்படாததனால் இந்த கடமைகள் நல்ல முறையில் ஒழுங்குபடுத்தப்படவில்லை என உறுதியானது. | பதில் வழங்கப்படவில்லை. | காணி அபிவிருத்தி செய்ற்பாடுகளை ஒழுங்குபடுத்த வேண்டும். |
| (இ) | சபை அதிகார எல்லையினுள் மாதாந்தம் திரட்டப்படும் 150 டொன் அளவான வேறாக்கப்படாத திண்மக் கழிவு இருப்பு சூரியபுர கழிவு கொட்டிலுக்கு முறையற்றதாக வெளியேற்றப்படுகின்றது. அதன் காரணமாக பிரதேசம் முழுவதும் பொலிதீன் மற்றும் ஏனைய உக்கலடையாத கழிவுகள் பரந்து காணப்படுவதாக அவதானிக்கப்ட்டன. இந்த கழிவு கொட்டில் காட்டு யானைகள் பயணிக்கும் வழியை மரைத்து அமைக்கப்பட்டுள்ளதால் காட்டு யானைகளால் இடம்பெறும் சேதம் தொடர்ந்தும் அதிகரித்து வந்துள்ளதால் கழிவு முகாமைத்துவத்தை சிறப்பாக திட்டமிடும் தேவைப்பாடு காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக ஒழுங்கான திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்த வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வைப்பு பதிவேடுகளை உரியவாறு பேணாமை, மீதிகளை பென்சிலால் குறிப்பிட்டிருத்தல் மற்றும் வைப்புச் செய்த திகதியை சரியாக குறிப்பிடாமை போன்ற விடயங்களினால் ஆண்டிறுதியில் நிலவிய ரூபா 1,298,870 ஆன 122 வைப்பு மீதிகளை ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கருத்திட்டங்கள் கணக்காணிப்பு மற்றும் திட்டமிடல் சிறந்ததாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகார ஆளணியினர் மற்றும் உள்ளவாறான ஆளணியினரை கவனத்திற் கொள்ளும் போது 14 பதவிகளில் 27 வெற்றிடங்கள் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டன. | பதில் வழங்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 திகதிய இலக்கம் 02/2018 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் இணைப்பு 02 படிவத்தை அடிப்படையாகக் கொண்டு சபையினால் மனிதவள திட்டமொன்றை தயாரித்து இருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் மனித வள முகாமைத்துவ திட்டத்தை தயாரிக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் உள்ளக கணக்காய்வு அலகொன்றை இஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் நடைமுறை ஆண்டில் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறே உள்ள கணக்காய்வு திட்டமொன்றை தயாரித்து தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அங்கீகாரத்தை பெறப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | உள்ளக கணக்காய்வை முறையாக்க வேண்டும். |

## 4.2 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 06 வருமான விடயங்களில் 13 சதவீதம் முதல் 1389 சதவீதம் வரையும் 06 செலவின விடயங்களிற்காக 26 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையும் விலகல்கள் அவதானிக்கப்பட்டததனால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | பாதீடு நடைமுறைக்கு சாத்தியமானதாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.3 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1980 இன் 47 ஆம் இலக்கம் கொண்ட தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையும் ஒன்று திரட்டப்படும் கழிவுப் பொருட்கள் வகைப்படுத்தப்படாது வெளியிடல் முறையற்ற வெளியேற்றல் அவ் வெளியேற்றும் பொருட்கள் வன சீவராசிகளினால் நுகரப்படல் முறையான வேலை திட்டமொன்று இல்லாமல் கழிவு வெளியேற்றப்படுவதனால் அதன் பிரகாரம் சுற்றாடல் பொலிதீன அதிகமாக காணப்படல் மற்றும் மஹவெலி வலயத்திற்குரிய பிரதேசமொன்றாவதால் வெள்ளப் பெறுக்கு காலங்களில் இந்த பொருட்கள் நீருடன் சேர்தல் போன்ற பிரச்சினை காரணமாக சுற்றுப் புரத்தில் வசிக்கும் மக்களிற்கு போன்றே யானைகள் போன்ற வனசீவராசிகளிற்கும் சுற்றாடல் பிரச்சினைகளிற்கு முகம் கொடுக்க நேரிட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | கழிவு முகாமைத்துவம் சிறந்ததாக மேற்கொள்ள வேண்டும். |